**பொதுத் தனியார் கூட்டுச் செயற்திட்டத்திற்கான தேசிய நிறுவனத்தின் - 2020**

---

பொதுத் தனியார் கூட்டுச் செயற்திட்டத்திற்கான தேசிய நிறுவனத்தின் 2019 யூன் 01 தொடக்கம் 2020 பெப்ரவரி 19 வரையான 08 மாதங்கள் மற்றும் 19 நாட்கள் காலப்பகுதிக்கான நிதிப் பயன்பாட்டுக் கூற்றின் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி (ஐபீஆர்டீ) ஆகியவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 30 ஆந் திகதிய 138145-எல்கே ஆம் இலக்க செயற்திட்ட மதிப்பீட்டு ஆவண அறிக்கையின் 23 ஆம் பிரிவு மற்றும் 2019 ஏப்ரல் 11 ஆந் திகதிய 8907 கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. இலங்கை அரசிற்கு அதன் முன்னுரிமை உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்காக தனியார் துறை நிதியுதவிக்கு வசதியளிக்கும் பொது தனியார் கூட்டாண்மை தயாரிப்பதை ஆதரிப்பதே இச்செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். அதைத் தொடர்ந்து, 2020 சனவரி 14 இல் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரவையின் அமைச்சர்களால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முடிவிற்கு கொண்டு வருவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இருந்த போதிலும், செயற்திட்டத்தின் தயாரிப்புப் பணிகளுக்காக புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி நிதியிலிருந்து ரூபா 57 மில்லியன் மற்றும் இலங்கை அரசின் நிதியிலிருந்து ரூபா 35 மில்லியன் ஆனது 08 மாதங்கள் மற்றும் 19 நாட்களுக்கான காலப்பகுதியில் செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

பொதுத் தனியார் கூட்டுச் செயற்திட்டத்திற்கான தேசிய நிறுவனத்தின் நிதிப் பயன்பாட்டுக் கூற்றானது 2019 யூன் 01 தொடக்கம் 2020 பெப்ரவரி 19 வரையான 08 மாதங்கள் மற்றும் 19 நாட்கள் காலப்பகுதிக்கான அனைத்து பொருண்மையான விடயங்களையும் நியாயமாகத் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

-

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்கீட்டுக் குறைபாடு | பெறுமதி ரூபா.மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| உள்ளூர் நிதியத்திலிருந்து 2019 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட செலவுகள் நிதி அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அச்செலவுகள் செயற்திட்டத்தின் நிதிப்பயன்பாட்டுக் கூற்றில் கொண்டு வரப்படவில்லை. | 35 | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | செயற்திட்டச் செலவுகள் வேறாகக் காட்டப்படல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள் மற்றும் விதிகளுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) கடன் உடன்படிக்கையின் 02 ஆம் அட்டவணை | | | |
| 1- ஈ பிரிவு | செயற்திட்டத்தின் செயற்பாட்டுக் கையேடு தயாரிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | கடன் உடன்படிக்கையின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| 1- உ பிரிவு | வருடாந்த வேலைத்திட்டம் மற்றும் பாதீடு என்பன தயாரிக்கப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம் (பீஏடீ) 24 ஆம் பிரிவு | செயற்திட்டத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை. | - மேற்படி - | பீஏடீ இன் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| | 2 ஆம் பிரிவு | கையேடு மற்றும் எக்செல் அடிப்படையிலான கணக்கீட்டு முறைமை என்பன அறிமுகப்படுத்தப் படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2016 யூன் 10 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை | செயற்திட்டத்திற்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. | - மேற்படி - | அரச சுற்றறிக்கைகளின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

**3.1 பௌதீகச் செயலாற்றல்**

**3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளைத் தொடங்குதல் / அமுல்படுத்தல் / நிறைவு செய்வதில் தாமதம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கான முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |